GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA5A**

6298–24

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

INDIAN PUBLIC ADMINISTRATION

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Elucidate the various theories of organisation.

   நிர்வாக அமைப்புமுறை பற்றிய பல்வேறு வகையான கோட்பாடுகளை விளக்கவும்.

2. Write an essay about Local Self Government.

   உள்ளாட்சி அரசு பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. Explain the merits and demerits of Independent Regulatory Commissions.

   தன்னிச்சை கட்டுப்பாட்டு ஆணையங்களின் நன்மை மற்றும் தீமைகளை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Describe the role of Public Administration in our country in relation to economic growth and social justice.

   பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதி தொடர்பாக நமது நாட்டில் பொது நிர்வாகத்தின் பங்கை விவரிக்கவும்.

5. Analyse 73rd and 74th Amendments to the Constitution.

   அரசமைப்பின் 73 மற்றும் 74வது அரசமைப்பு சட்டத் திருத்தங்களை ஆய்வு செய்க.

6. State the constitution, powers and functions of National Human Rights Commission.

   தேசீய மனித உரிமைகள் ஆணையத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை குறிப்பிடவும்.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Managerial View.

மேலாண்மை பார்வை.

(b) Delegated legislation.

ஒப்படைவு சட்டம்.

(c) Decision Making.

முடிவெடுத்தல்.

(d) Participation.

பங்கேற்பு.

(e) National Development Council.

தேசீய வளர்ச்சி மன்றம்.

(f) Liberalisation.

தாராளமயமாதல்.

(g) Ombudsman.

ஓம்புட்ஸ்மேன்.

PART D — (6 × 2 = 12 marks)

8. Answer SIX of the following briefly :

பின்வருவனவற்றுள் ஆறினுக்கு சுருக்கமாக விடையளிக்கவும் :

(a) Co-ordination.

ஒருங்கிணைப்பு.

(b) Formal organisation.

முறையான அமைப்பு.

(c) Public Corporations.

பொதுக்கழகங்கள்.

(d) Discipline.

ஒழுக்கம்.

(e) Henry Fayol.

ஹென்றி ஃபாயல்.

(f) Right to Information.

தகவல் அறியும் உரிமை.

(g) Field Administration.

கள நிர்வாகம்.

(h) Private Administration.

தனியார் நிர்வாகம்.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

FA5B

6299–24

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

JURISPRUDENCE

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the meaning and scope of jurisprudence.
சட்டவியலின் பொருள் மற்றும் அளாவுகையை விளக்குக.

2. Distinguish between Analytical School and Historical School.
பகுப்பாய்வு பயில்நெறியத்தையும் வரலாற்றுப் பயில்நெறியத்தையும் வேறுபடுத்துக.

3. Explain Austin's theory of "Sovereignty"?
"இறையாண்மை" குறித்த ஆஸ்டினின் கருத்தை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the essential elements of state?
அரசின் முக்கியக் கூறுகள் யாவை?

5. Explain the essentials of Valid Custom.
செல்லத் தகுந்த வழக்காற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

6. Explain the principles of Public Interest Litigation.
பொதுநல வழக்கின் கோட்பாடுகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Testamentary Succession.

உயில் மூலம் வாரிசுரிமை.

(b) Legal Aid Clinics.

இலவச சட்ட உதவி முகாம்கள்.

(c) Corporate personality.

நிறுவனத்தின் நபர்த்துவம்.

(d) Questions of law and fact.

சட்டம் மற்றும் பொருண்மை எழுவினாக்கள்.

(e) Oral and documentary evidence.

வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம்.

(f) Law and State.

சட்டமும் அரசும்.

(g) Lease.

குத்தகை.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்டவகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A, was a 10 year old girl child. The child committed an offence of theft. In this case whether the child could be punished?

'அ' என்ற 10 வயது சிறுமி திருட்டுக் குற்றம் புரிந்தாள். சிறுமி இவ்வழக்கில் தண்டிக்கப்படுவாரா?

9. 'A', is working outside India. 'B', his wife who is sick, is residing in India. 'A' promised to pay 'B' Rs. 40,000/-. Later 'A' refuses to pay. Can 'B' claim?

'அ' என்பவர் இந்தியாவிற்கு வெளியே தொழில் செய்கிறார். இந்தியாவில் குடியிருக்கும் அவர் மனைவி 'ஆ' உடல் நலன் சரி இல்லாதவர். 'அ' அவருக்கு Rs. 40,000/- அளிப்பதாக உறுதியுரை அளிக்கின்றார். பின்னர் தர மறுக்கின்றார். 'ஆ' கேட்க இயலுமா?

10. 'A' and 'B' owe a sum of money to 'C'. There is only one debt. Whether 'C' can recover the full amount either from 'A' or from 'B'. Decide.

'A'யும் 'B'யும் 'C'–க்கு சிறிது பணம் கடன்பட்டிருக்கிறார்கள். இது ஒரே ஒரு கடன்தான். 'C' இந்த முழுதொகையையும் 'A'-யிடமிருந்து அல்லது 'B'-யிடமிருந்து வசூலிக்கமுடியுமா. முடிவு செய்க.

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register Number | | | | | | | | |

**FA5C**

**6327–24**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

CONSTITUTIONAL LAW – I

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Fundamental rights are protection against 'state action' and limitations on the State. In this aspect define 'State' and explain the expansion of the term 'other authorities' by judiciary, with landmark cases.

   அடிப்படை உரிமைகள் 'அரசின் செயலுக்கு எதிரான' பாதுகாப்பாகும் மற்றும் அரசிற்கு குறிப்பிட்ட வரையறையை விதிக்கிறது. இதன் அடிப்படையில் 'அரசு' என்பதனை வரையறுத்து 'இன்ன பிற அமைப்புகள்' என்ற சொற்றொடரை நீதித்துறையினர் பரந்ததாக பொருள் கொண்டுள்ளதை வரலாற்று சிறப்புமிக்க வழக்குகளுடன் விளக்கவும்.

2. "Freedom of press has not been mentioned in Article 19 but it is comprehended within Art. 19(1)(a) of the Constitution". Discuss.

   ஷரத்து 19ல் பத்திரிகை சுதந்திரத்தை குறித்து குறிப்பிடவில்லையென்றாலும் அரசமைப்புச் சட்டம் ஷரத்து 19(1)(a)–ல் உள்ளடக்கியதாகும்" – விவாதிக்கவும்.

3. Explain the procedure for enforcement of fundamental rights, guaranteed under Part III of the Constitution.

   அரசமைப்பில் பகுதி IIIல் உத்தரவாதம்ளிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை செயலாக்கம் செய்தல் குறித்த நடைமுறையை விளக்கவும்.

## PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the enforcement of fundamental duties guaranteed under Art. 51-A of the Constitution.

   அரசமைப்பில் ஷரத்து 51–Aவில் உத்தரவாதமளிக்கப்பட்ட அடிப்படை கடமைகளின் செயலாக்கம் குறித்து விவாதிக்கவும்.

5. "Art. 44 of the Constitution imposes an obligation on 'State' to achieve gender justice in all religions" – Explain.

   "அரசமைப்பில் ஷரத்து 44–ஆன "பாலின நீதியை" அனைத்து மதத்தினரிடையே உறுதிசெய்திட வேண்டுமெென ஒரு கட்டுப்பாட்டை 'அரசின்' மீது திணிக்கின்றது" – விளக்கவும்.

6. Explain the salient features of Indian Constitution.

   அரசமைப்புச் சட்டத்தின் இன்றியமையாத சிறப்பியல்புகளை விளக்கவும்.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Objective resolution

   குறிக்கோள் தீர்மானம்

   (b) B.N. Rao

   பீ.என். இராவ்

   (c) Types of Constitutions

   அரசமைப்பின் வகைகள்

   (d) Right to freedom of religion

   மதசார்ந்த சுதந்திர உரிமைகள்

   (e) Double jeopardy

   இரட்டை இடர்

   (f) Swaran singh Committee

   ஸ்வரன் சிங் குழு

   (g) Domicile

   வாழ்வகம்

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. 'X' was arrested by the Police Officer for committing the offence of 'Affray'. The Police Officer put handcuff and produced before the Judicial Magistrate – I, Pune. Mr. 'X' challenged for putting handcuff by Police officer as violation of fundamental right. Can Mr. 'X' win in the case.

   தெருச் சண்டை புரிந்ததற்காக திரு. 'X' என்பவரை காவல்துறையினர் கைது செய்தனர். கை விலங்கு மாட்டப்பட்டு புனேயிலுள்ள முதலாவது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். திரு. 'X' என்பவர் கைவிலங்கிடுவது அவருடைய அடிப்படை உரிமையை மீறியதாக எதிர்கிறார். இதில் திரு. 'X' வெற்றிபெறுவாரா?

9. Gayathri has committed an offence and during that time 3 years punishment was provided for such an offence. In meantime, punishment for that crime has been reduced to be one year. Trial commenced before the court. Now, which sentence should be imposed by the court for proving of that offence. Decide.

   காயத்திரி ஒரு குற்றத்தை புரியும்போது அக்குற்றத்திற்கு தண்டனை மூன்று ஆண்டுகள் என இருந்தது. அதன் பிறகு அக்குற்றத்திற்குண்டான தண்டனையானது ஒரு ஆண்டாக குறைக்கப்பட்டது. தற்பொழுது நீதிமன்ற விசாரணை நீதிமன்றத்தில் தொடங்கிவிட்டது. இக்குற்றமானது நிரூபணம் செய்யும் பட்சத்தில் எந்தத் தண்டனையை நீதிமன்றம் விதிக்க முடியும். தீர்மானிக்கவும்.

10. Mr. 'X' was infected by incurable disease. Now he decides to end his life. Whether it is permitted in Indian Law? Decide.

   சரிசெய்ய முடியாத வியாதியால் திரு. 'X' என்பவர் பாதிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது தன் வாழ்வை முடித்துக் கொள்ள முடிவு செய்கிறார். இவ்வாறு தன் வாழ்வை முடித்துக் கொள்ள இந்திய சட்டம் வழிவகை செய்கிறதா? தீர்மானிக்கவும்.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA5D**

**6300-24**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF PROPERTY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is Easement? Describe the circumstances under which Easements are Extinguished?

   வசதியுரிமை என்பது யாது? எந்தெந்தச் சூழ்நிலைகளில் வசதியுரிமைகள் மறைந்து விடுகின்றன என்பதை விவரி.

2. Explain the scope and application of the Doctrine of Redeem up and Foreclosure.

   "கீழிருந்து மேலாக மீட்பு செய்க. மேலிருந்து கீழாக மீட்படைப்பு செய்க" என்கின்ற கோட்பாட்டினை விவரித்து அதன் நோக்கம் மற்றும் பயன்பாட்டை விளக்கவும்.

3. "If the owner rendered the Fraud possible by holding out the other person as the owner, he has to suffer". – Discuss this statement.

   "சொத்தின் உரிமையாளர் மற்ற நபரை உரிமையாளராக காட்டி மோசடி சாத்தியமாக்கினார், அவர் பாதிக்கப்பட வேண்டும்" – இக்கூற்றினை விவாதி.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define Sale and explain the principle of "Caveat emptor". Whether contract of sale is a contract of Uberrimae Fidei? – Examine.

   விற்பனையை விவரித்து, வாங்குபவனே விழித்திரு என்ற கோட்பாட்டை விளக்கவும். விற்பனை ஒப்பந்தம் ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில் அமைந்த ஒப்பந்தமா? – ஆராய்க.

5. Discuss the Doctrine of Election and bring out the difference between English law and Indian law.

தேர்ந்து கொளல் கோட்பாட்டினை விவரித்து அது குறித்து ஆங்கில சட்டத்திற்கும் இந்திய சட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை வெளிக்கொணர்க.

6. Discuss the law relating to Suspension and Revival of Easements.

வசதியுரிமைகளை நிறுத்தி வைத்தல் மற்றும் உயிர்ப்பித்தல் தொடர்பான சட்டத்தை விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Kinds of Lease

குத்தகையின் வகைகள்

(b) Spes Successionis

எதிர்நோக்கு இறங்குரிமை

(c) Legal Subrogation

சட்டவழி மாற்றமர் அடைமான உரிமை

(d) Doctrine of acceleration

உரிமை விரைவுக் கோட்பாடு

(e) Exchange

பரிமாற்றம்

(f) Tulk-v-Moxhay

டல்க்-எதிர்-மாக்சே

(g) Pendente lite

வழக்கு நிலுவையிலிருத்தல்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Sanjay working as an Assistant Professor in Tirumala Venkateshwara Government College. He transfers his salary to his creditor Mr. Ashok, so as to receive the salary until such time as his debt gets over. Is the transfer valid? Why?

திரு. சஞ்சய் எனும் நபர் திருமலா வெங்கடேஸ்வரா அரசுக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். அவர் தன்னுடைய மாத வருமானத்தை தனக்கு கடன் அளித்த திரு. அசோக்கிற்கு மாற்றாக்கம் செய்கிறார். தன்னுடைய கடன் அடையும் வரை தனது சம்பளத்தை உரிமை மாற்றம் செய்வதாகக் கூறி அவ்வாறே செய்கிறார். இந்த மாற்றம் செல்லுமா? ஏன்?

9. A, filed a suit against B for recovery of his land. While the suit was pending, B sold the land to C. C, was the bonafide purchaser for consideration without notice of the pending litigation. The suit was decreed in A's favour. Whether C's right will be affected? Decide.

அ என்பவர் ஆ என்பவர் மீது தனது நிலத்தினை திரும்பப்பெற வழக்கு தொடுத்தார். வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது, ஆ என்பவர் அந்த நிலத்தை இ என்பவருக்கு விற்றுவிட்டார். இ என்பவர் நிலுவையில் இருக்கும் வழக்கைப் பற்றி அறியாது மறுபயன் வழங்கி நல்லெண்ணத்தோடு வாங்கினார். வழக்கில் தீர்ப்பு அ-விற்கு சாதகமாக அளிக்கப்பட்டது. இ-யினுடைய உரிமை பாதிக்கப்படுமா? தீர்வு காண்க.

10. Raju mortgages his house to Buvana, the mortgagee. Buvana is insisting that Raju must redeem that mortgaged property within 3 years or otherwise the transfer will deemed to be sale. Advise Raju.

ராஜு தனது வீட்டினை புவனா என்பவரிடம் அடைமானம் செய்கிறார். புவனா ராஜுவிடம் 3 ஆண்டுகளுக்குள் வீட்டை மீட்கவில்லை எனில் விற்பனையாக கருதப்படும் என வலியுறுத்துகிறார். ராஜுவிற்கு அறிவுரை வழங்கவும்.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA5E**

6328–24

(For the candidates admitted from 2017 – 2018 to 2023–2024)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five–year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF EVIDENCE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Critically analyse the admissibility of dying declaration.

மரண வாக்குமூலத்தின் செல்லுந்தன்மை குறித்து பகுப்பாய்வு செய்க.

2. Explain exclusion of oral evidence by documentary evidence.

வாய்மொழி சாட்சியத்தை ஆவண சாட்சியம் மூலம் விலக்குதல் குறித்து விவரிக்கவும்.

3. When do facts not otherwise relevant become relevant?

வேறுவகையாக தொடர்பற்ற பொருண்மைகள், தொடர்புடையனவாக ஆவது எப்போது?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. 'Some of the witnesses cannot be compelled to disclose communications'– Explain their privilege.

'சில சான்றுரைஞர்களைக் கண்டிப்பாக பரிமாறப்பட்ட தகவல்களைக் கூற வேண்டும் எனக் கட்டாயப்படுத்த முடியாது'– அந்தச் சான்றுரைஞர்களின் சிறப்புரிமை பற்றி விளக்குக.

5. Briefly explain 'estoppel'

'முரண்தடை' குறித்து சுருக்கமாக விளக்குக.

6. Distinguish between admission and confession.

ஏற்புரைக்கும், குற்ற ஏற்புரைக்கும் இடையிலான வேறுபாடு குறித்து கூறுக.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Corpus delicti

குற்றத்திற்கான அடிப்படை

(b) Presumption as to dowry death

வரதட்சிணை மரணம் பற்றிய அனுமானம் (துணிபு)

(c) Secondary evidence

இரண்டாம்நிலை சாட்சியம்

(d) Lex fori

நடவடிக்கை இடம்பெறும் நாட்டின் சட்டம்

(e) Test identification parade

சோதனை அடையாள அணிவகுப்பு

(f) Affirmation

மெய்யுறுதி

(g) Communication between spouses

வாழ்க்கைத் துணைவர்களுக்கிடையிலான தகவல் தொடர்பு

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Shortly after committing a crime, 'A' absconds from his house. Is it a relevant fact?

ஒரு குற்றம் செய்த சிறிது நேரத்தில் 'அ' என்பவர் தனது வீட்டிலிருந்து தலைமறைவாகிவிடுகிறார். இது ஒரு தொடர்புடைய பொருண்மையா?

9. 'A', a client, says to 'B', an attorney– "I have committed forgery and I wish you to defend me." Is this a privileged communication?

"பொய் ஆவணம் புனைதல் என்பதை செய்துவிட்டேன்; எனக்காக நீங்கள் எதிர்வாதம் செய்யவேண்டும் என நான் விரும்புகிறேன்" என்று, 'ஆ' என்ற வழக்கறிஞரிடம் 'அ' என்னும் கட்சிக்காரர் கூறுகிறார். இது ஒரு காப்புடை (சிறப்புரிமை) தகவல் தொடர்பா?

10. 'A', a woman states in her evidence before the court that she did not consent to sexual intercourse by the accused person 'B'. How will the court presume? Is the presumption rebuttable?

நீதிமன்றத்தில் 'அ' என்ற ஒரு பெண், தனது சாட்சியத்தில், குற்றம் சாட்டப்பட்ட நபர் 'ஆ' என்பவருடன் ஆன உடல்உறவிற்கு இசைவு (சம்மதம்) தெரிவிக்கவில்லை என்று கூறுகிறார். இதில் நீதிமன்றம் எவ்வாறு அனுமானிக்கும்? இந்த அனுமானம் மறுக்கப்படக் கூடிய அனுமானமா?

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA5F**

**6329–24**

(For the candidates admitted from 2022-2023 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2024.

(Five-year Regular Course)

Third Year – Fifth Semester

BHARATIYA SAKSHIYA ADHINIYAM, 2023.

Time : 2½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "Anything said, done or written by any one of the conspirators is a relevant fact as against all the other conspirators". Explain the above statement in the light of provisions under Bharatiya Sakshiya Adhiniyam.

   "சதிகாரர்களில் யாரேனும் ஒருவரால் சொல்லப்பட்ட, செய்யப்பட்ட அல்லது எழுதப்பட்ட எதுவும் மற்ற அனைத்து சதிகாரர்களுக்கு எதிராக ஒரு தொடர்புடைய பொருண்மையாகும்". மேற்கண்ட வாக்கியத்தை பாரதிய சாட்சிய அதிநிய சட்டத்தின் ஒளியில் விளக்குக.

2. Define 'admission'. Who can make them? What is the evidentiary value of an admission under the Bharatiya Sakshiya Adhiniyam?

   'ஒத்தேற்புரை' என்றால் என்ன? யார் அவற்றைச் செய்யலாம்? பாரதிய சாட்சிய அதிநிய சாட்சியத்தின் கீழ் ஒத்தேற்புரையின் சான்றியல் மதிப்பு யாது?

3. What is meant by burden of proof? It is said that the burden of proof may shift in the course of a suit or prosecution. Explain with illustrations.

   மெய்ப்பிக்கும் சுமை என்றால் என்ன? உரிமையியல் வழக்கு அல்லது குற்ற வழக்கு நடப்பிலிருக்கையில் மெய்ப்பிக்கும் சுமை இடம் மாறலாம் என்று சொல்லப்படுகிறது. இக்கூற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Distinguish between Relevancy and Admissibility of evidence.

சாட்சியத்தை அனுமதித்தல் மற்றும் தொடர்புடைமை – வேறுபடுத்திக் காட்டுக.

5. Explain 'Res Gestae' with relevant case laws.

தகுந்த வழக்குகளின் துணையுடன் 'ஒன்றிய செயல்' குறித்து விளக்குக.

6. Enumerate the facts of which the court must take judicial notice.

நீதிமன்றம் நீதிமுறையில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய பொருண்மைகளைக் கூறுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Alibi.

வேற்றிட வாதம்.

(b) Primary Evidence.

முதன்மை சான்று.

(c) Oral Evidence.

வாய்மொழி சான்று.

(d) Cross-Examination.

குறுக்கு விசாரணை.

(e) Hostile Witness.

பிறழ் சாட்சி.

(f) Patent Ambiguity.

வெளிப்படை பொருள் மயக்கம்.

(g) Conclusive Proof.

அறுதிச் சான்று.

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The question is whether 'A' has been guilty of cruelty towards 'B', his wife. Whether the expressions of their feeling towards each other shortly before and after the alleged cruelty are relevant.

   'B' என்கிற தன் மனைவியிடம் 'A' என்பவர் கொடுமைக் குற்றம் புரிந்தாரா என்பது வினாவாகும். கொடுமைக்கு முன்பும், பின்பும் ஒருவருக்கு ஒருவர் வெளிப்படுத்தும் உணர்வுகள் தொடர்புடையதா?

9. 'A' is tried for murder. During the trial, evidence of bad character is produced by the prosecution against the accused. State the admissibility and appreciability of bad character evidence.

   'A' என்பவர் கொலை குற்றத்திற்காக விசாரிக்கப்படுகின்றார். விசாரணையின் போது அரசு தரப்பு 'A'–விற்கு எதிராக தீய குண இயல்பு உடையவர் என்ற சான்றினை அளிக்கிறது. தீய குண இயல்பு சான்றினை ஏற்றுக்கொள்ளும் தன்மை மற்றும் அதன் குண இயல்புகளைக் குறிப்பிடவும்.

10. 'A' is stabbed to death by 'B'. 'C' is an eye witness to this occurrence. 'C' informs this to his friend 'D'. Decide the admissibility of the oral evidence given by 'D' at the time of trial of 'B' for murder.

    'B' என்பவர் 'A' என்பவரை கத்தியால் குத்திக் கொலை செய்கிறார். இந்த நிகழ்வை 'C' என்பவர் நேரில் பார்க்கிறார். இது குறித்து 'C' என்பவர் 'D' என்பவரிடம் தெரிவிக்கிறார். 'A' என்பவரை கொன்ற வழக்கில் 'D' என்பவர் கொடுக்கின்ற வாய்மொழிச் சான்று ஏற்புடையதா இல்லையா?

---